**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை**
**நிலை 2 – இகரம்**
**தமிழ் விருப்ப மொழி – மாதிரி வினாத்தாள்**

காலம்: 1.30 மணி நேரம் மொத்த மதிப்பெண்: 100

**பகுதி – 1 (கேட்டல் திறன்)** (5 x 2 = 10)

I. **நீங்கள் கேட்ட பத்தியிலிருந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

ஒரு நாட்டின் தொன்மையை அறிவதற்குப் பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று பழமொழி. இதனை முதுமொழி என்றும் கூறுவர். மக்களின் அனுபவங்களே பழமொழிகளாக உருவாகின்றன. முதியவர்கள் கூறும் கதைகளில் பழமொழிகள் கட்டாயம் இடம்பெறும். மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பழமொழிகள் தெரிவிக்கின்றன.

**வினாக்கள்:**

1. முதியவர்கள் கூறும் கதைகளில் எவை இடம்பெறும்?
   அ) பெயர்கள் ஆ) பழமொழிகள் இ) வீண்பேச்சு ஈ) உரையாடல்கள்
2. பழமொழியின் வேறு பெயர்?
   அ) நன்மொழி ஆ) தீமொழி இ) முதுமொழி ஈ) வன்மொழி
3. எவை பழமொழிகளாக உருவாகின்றன?
   அ) அனுபவங்கள் ஆ) கதைகள் இ) பாடல்கள் ஈ) இசைகள்

குற்றாலம் தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது தென்னகத்தின் "ஸ்பா" என்று அழைக்கப்படுகிறது. குற்றாலத்தில் ஒன்பது அருவிகள் உள்ளன. அவற்றுள் பேரருவியே முக்கிய அருவியாகும். பேரருவிக்கு மேல் சிற்றருவி அமைந்துள்ளது.

**வினாக்கள்:**

4. குற்றாலத்தின் முக்கிய அருவி எது?
   அ) தேனருவி ஆ) மலையருவி இ) புதிய அருவி ஈ) பேரருவி
5. பேரருவிக்கு மேல் எந்த அருவி உள்ளது?
   அ) சிற்றருவி ஆ) புலியருவி இ) ஐந்தருவி ஈ) தேனருவி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி – 2

II. சரியான விடையைத் தேர்வு செய்து குறித்தல். (20 x 2 = 40)

1. 'தமிழ்த் தாத்தா' என்று அழைக்கப்படுபவர்

அ) உ.வே.சாமிநாதர் ஆ) திரு.வி.கல்யாணசுந்தரனார்

இ) பரிதிமாற்கலைஞர் ஈ) தேவநேயப் பாவணர்

2. பார்வை இழந்தவர்கள் படிப்பதற்காக என்ன எழுத்துமுறை உருவாக்கப்பட்டது?

அ) சைகை மொழி ஆ) சுருக்கெழுத்து

இ) பிரெய்லி ஈ) பேச்சு மொழி

3. நவீன ஆங்கில இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்?

அ) ஷெல்லி ஆ) ஷேக்ஸ்பியர்

இ) ஜான் டோன் ஈ) ஜான் கீட்ஸ்

4. தமிழர்களின் மரபு விளையாட்டுகளுள் ஒன்று.

அ) கேரம் ஆ) கிரிக்கெட்

இ) டென்னிஸ் ஈ) கபடி

5. கிறிஸ்டோபர் கொலம்பஸ் எந்த நாட்டைக் கண்டுபிடித்தார்?

அ) அமெரிக்கா ஆ) சுவீடன்

இ) ஜெர்மனி ஈ) ஆஸ்திரேலியா

6. வங்க தேசத்தின் பாரம்பரியத் துணி வகை எது?

அ) பருத்தி ஆ) பட்டு

இ) மஸ்லின் ஈ) நைலான்

7. அறுசுவையில் சேராத சுவை எது?

அ) இனிப்புச் சுவை ஆ) நகைச் சுவை

இ) புளிப்புச் சுவை ஈ) உவர்ப்புச் சுவை

8. கற்க கசடறக் கற்பவை _______ நிற்க அதற்குத் தக.

அ) கற்றபின் ஆ) பெற்றபின்

இ) பட்டபின் ஈ) நட்டபின்

9. நன்றி மறப்பது ______ நன்றல்லது அன்றே மறப்பது நன்று.

அ) தீது ஆ) நன்று

இ) நன்றன்று ஈ) தீதன்று

10. 'கடும்பசி' என்பதன் பொருள்

அ) மிகுந்த பசி ஆ) மிகாப் பசி

இ) பசி மிகும் ஈ) பசி இல்லை

www.Padasalai.Net

11. 'பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின்' – இதில் 'பீலி' என்பதன் பொருள்

அ) புறா இறகு ஆ) மயில் இறகு

இ) காக்கைச் சிறகு ஈ) கிளிச் சிறகு

12. 'தோன்றின்______ தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று'

அ) புகழொடு ஆ) பெயரோடு

இ) பணத்தொடு ஈ) வளத்தொடு



13. முகிலனைப் ______ கவின் இருந்தான்.

அ) ஆக ஆ) மேல்

இ) போல் ஈ) கீழ்

14. மக்களைக் குறிக்கும் திணை

அ) ஆண்பால் ஆ) பெண்பால்

இ) அஃறிணை ஈ) உயர்திணை

15. காலைப் பொழுது ____ நிறைந்தது.

அ) பணி ஆ) பனி

இ) கனி ஈ) தனி

16. 'முயல் வந்தது' என்பதன் பன்மைத் தொடர்

அ) முயல்கள் வந்தான் ஆ) முயல்கள் வந்தது

இ) முயல்கள் வந்தன ஈ) முயல் வந்தன

17. மயில் தோகை _______ ஆடியது. இதில் விடுபட்ட சொல்லை நிரப்புக.

அ) விரித்த ஆ) விரித்தது

இ) விரிந்தது ஈ) விரித்து

18. வெண்பா, மலரைப் பறித்தாள். இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

அ) ஐ ஆ) ஆல்

இ) கு ஈ) கண்

19. 'சூரியன்' என்பதன் வேறு சொல்

அ) தண்நிலவு ஆ) பகலவன்

இ) சந்திரன் ஈ) மதியம்

20. Gooseberry என்பது தமிழில்

அ) சுரைக்காய் ஆ) பாகற்காய்

இ) வாழைக்காய் ஈ) நெல்லிக்காய்

www.Padasalai.Net

III. **சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.** (10 x 2 = 20)

1. கைவிரலில் அணியும் அணிகலன் பெயர் தோடு. சரி/தவறு
2. சித்தன்னவாசல் ஓவியங்கள் புகழ் பெற்றவை. சரி/தவறு
3. 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது ஒரு பழமொழி. சரி/தவறு
4. காமராசர் இந்தியப் பிரதமராக இருந்தவர். சரி/தவறு
5. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' – இதில் திருவள்ளுவர், பிறப்பால் அனைவரும் சமம் என்று கூறுகிறார். சரி/தவறு
6. 900 என்பது தொண்ணூறு என்ற எண்ணைக் குறிக்கும். சரி/தவறு
7. மாறன் என்னும் சொல் பெண்பாலைக் குறிக்கும். சரி/தவறு
8. பெயர்ச்சொல்லின் பண்பை உணர்த்துவது பெயரடை. சரி/தவறு
9. பூங்காவில் வண்ண வண்ணப் பூக்கள் பூத்திருந்தன – இதில் 'வண்ண வண்ண' என்பது அடுக்குத்தொடர். சரி/தவறு
10. இசையமைப்பாளர் என்பதற்கு ஆங்கிலத்தில் Singer. சரி/தவறு

## பகுதி – 3

IV. **எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.** (6 x 5 = 30)

1. **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**
   1. உன்னைப் பற்றி இரண்டு தொடர்கள் எழுதுக.
   2. உன் பள்ளி பற்றி இரண்டு தொடர்கள் எழுதுக.

2. **பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, அதன் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அறிவியலின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பு கணினி. 1843இல் இங்கிலாந்தைச் சேர்ந்த சார்லஸ் பாபேஜ் என்பவர், கணிதச் செயல்பாட்டுக்காகப் புதிய கருவியை வடிவமைத்தார். இதுவே கணினி தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. அதனால், இவரைக் 'கணினியின் தந்தை' என்று போற்றினர். முதன்முதலில் உருவாக்கப்பட்ட கணினி அளவிலும் உருவத்திலும் மிகப் பெரியதாக இருந்தது. கணினியில் மேசைக் கணினி, மடிக்கணினி, கையடக்கக் கணினி எனப் பல வகைகள் உள்ளன. அன்றாட வாழ்வில் கணினி மிகவும் பயன்படுகிறது. கணினியுடன் இணையத்தை இணைத்ததால், உடனுக்குடன் பல செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது. கல்வித் துறையில் கணினிவழிக் கல்வி மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**வினாக்கள்:**

1. அறிவியலின் கண்டுபிடிப்பில் மிகச் சிறந்தது எது?
2. சார்லஸ் பாபேஜ் எவ்வாறு போற்றப்பட்டார்?
3. கணினி மூலம் உடனுக்குடன் பல செய்திகளை எவ்வாறு அறியலாம்?
4. சார்லஸ் பாபேஜ் எந்தச் செயல்பாட்டுக்காகக் கருவியை வடிவமைத்தார்?
5. கல்வித் துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது எது?

**3. பின்வரும் வரிசை மாறியுள்ள தொடர்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

அ) ஒரு நாள் இருவரும் பழங்கள் பறிக்கத் தோட்டத்திற்குச் சென்றனர்.


ஆ) வளவனும் மாறனும் நண்பர்கள்.

இ) இருவரும் பழங்களைப் பங்கிட்டுக் கொண்டு மகிழ்வுடன் வீடு திரும்பினர்.

ஈ) பழங்கள் மரத்தில் உயரத்தில் இருந்ததால் பறிக்க முடியவில்லை.

உ) மாறனை வளவன் தன் தோளில் தூக்கி, பழங்களைப் பறிக்கச் செய்தான்.

**4. ஒரே உருவமுடைய பறவை அல்லது விலங்கினுடைய எழுத்துகளை வரிசை முறையில் சேர்த்து, சொற்களை உருவாக்குக.**




**சான்று: பலகை**

1. __________
2. __________
3. __________
4. __________
5. __________

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**5. அடைப்புக்குறிக்குள் உள்ள வேற்றுமை உருபைச் சேர்த்து, தொடரை முழுமையாக்குக.**

1. நான் பள்ளி (கு) சென்றேன்.

   ______________________________

2. குயவன் பானை (ஐ) வனைந்தான்.

   ______________________________

3. மணி தூரிகை (ஆல்) வண்ணம் தீட்டினான்.

   ______________________________

4. அம்மா (உடன்) தங்கை வந்தாள்.

   ______________________________

5. நீ நண்பன் (ஒடு) விளையாடினாய்.

   ______________________________

**6. படத்தை உற்றுநோக்கிக் கீழே கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**




**வினாக்கள்:**

1. கொடுக்கப்பட்ட விளம்பரம் எதனைப் பற்றியது?
2. கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. கண்காட்சியில் இடம்பெறும் பொருட்கள் எவை?
4. எத்தனை ரூபாய்க்குமேல் வாங்கினால் இலவசப் பரிசுகள் பெறலாம்?
5. கண்காட்சி எத்தனை நாள்களுக்கு நடக்கிறது?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

7. கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, ஐந்து தொடர்கள் எழுதுக.



**தொடர்கள்:**

1. ______________________________________________________
2. ______________________________________________________
3. ______________________________________________________
4. ______________________________________________________
5. ______________________________________________________

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com